ஈழக்குயிலின்

# இதயத்தில் நீ



Donated By
AN NUSRATH
No 171, LIBRARY ROAD,
MARUTHAMUNAI
KALMUNA E. P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1994-09-17 ஆம் திகதி இரவு
7 மணிக்கு "ஈ. புக்குயால் இத்ரீஸ்"
அவர்களை அவர்களின் ஊரான
மருதமுனையாளி அவர்களது இல்லத்
தில் சந்தித்து உரையாடிய போது
அன்னார் அன்பளிப்பாக வழங்கி
யது இது.

[signature]
18/9/94

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழக்குயிலின்

# இதயத்தில் தீ

Donated By
AN NUSRATH
No 171, LIBRARY ROAD,
MARUTHAMUNAI
KALMUNA E.P.

அந்-நஸ்ரத் வெளியீடு 01.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிக்கை:

மர்உறூம் நாவலர் ஈழமேகம்:

எம்.ஐ.எல்.பக்கீர்த் தம்பி (ஜே.பீ)ஐயா, அவர்களுக்கு.

-"ஈழக்குயில் இத்ரீஸ்"-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்பு :

ஈழக்குயில் இத்ரீஸ் யாத்த,
அஞ்சலிக் கவிதைகள்.

இது,
ஈழக்குயிலின் இதயத்தில் நீ.

முதலாம் பதிப்பு.
பங்குனித் திங்கள் - 1994.

பிரதிகள் :- 500.

வெளியீடு :

அந் - நுஸ்ரத் - எழுப்படும்,

வறிய குடும்ப அபிவிருத்தி சாந்தி,
சமாதான சமூக நலன்புரிச் சங்கம்.

171, பொது நூலக வீதி,

மருதமுனை.

19940319.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

அன்புடையீர்,

தங்களின் கையில் இருக்கும் "ஈழக்குயிலின் இதயத்தில் நீ" என்னும் ஏடு ஒரு காணிக்கையாகும். எமது மரியாதைக்குரிய மர்ஹூம் நாவலர் ஈழமேகம் எம்.ஐ.எல். பக்கீர்தம்பி ஐயா அவர்களின் மறைவையொட்டி அன்னாருக்கு மரியாதை செலுத்தும் முகமாக கவிஞர் ஈழக்குயில் இத்ரீஸ் அவர்களால் எழுதப்பட்ட இரங்கல் பாடலாகும். கவிஞர் ஈழக்குயில் இத்ரீஸ் மர்ஹூம் ஈழமேகம் அவர்களின் இலக்கிய மாணவராவார்.

மர்ஹூம் ஈழமேகம் அவர்கள் 1985.03.18 ம் திகதி இறையடி எய்தியதனால், ஈழக்குயில் இத்ரீஸ் அவர்களால் 02.03.86 இல் எழுதப்பட்டு, பாவலர் பசீல் காரியப்பர் தலைமையில் அஞ்சலி செலுத்திய கவிதையே முதலாவதாகவும், இதற்கு முன்னும் பின்னுமாக வேறு இரு சந்தர்ப்பங்களில் பாடிய இரு கவிதைகளும், மர்ஹூம் ஈழமேகம் அவர்களால் அறிமுகம் வரையப்பட்டு தினபதியில் வெளிவந்த கவிஞர் ஈழக்குயிலின் முதலாவது கவிதையும் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன.

புலவர்மணி ஆ.மு. சரிபுத்தீன் ஐயா அவர்களாலும், கவிஞர் வாணரினாலும் வழங்கப்பட்ட இரு அணிந்துரைகளுடன், கவிஞரின் "நண்பர்களுக்கு" தெரியப்படுத்தும் செய்தியுடன் மிகவும் பொருத்தமான முறையில் அமைந்துள்ளது ஈழக்குயிலின் இதயத்தில் நீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்-நுஸ்ரத் எனும் வறிய குடும்ப அபிவிருத்தி, சாந்தி சமாதான சமூக நலன்புரிச் சங்கத்துக்கு இதனை வெளியிடும் சந்தர்ப்பத்தைக் கொடுத்தமைக்காக கவிஞர் ஊழக் குயில் இத்ரீஸ் அவர்களுக்கும் இதனை தட்டச்சு செய்து உதவிய நண்பர் எச். எம். ஏ. உறசன் எழுத்தாளர் அவர்களுக்கும் இது வெளிவருவதற்காக உதவிய அட்டாளைச்சேனை பிரதேச செயலக ஊழியர்களுக்கும் அந்-நுஸ்ரத் ஆழ்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

"நன்றியுடன்"

எம்.ரீ. ராஜா,
தவிசாளர், அந்-நுஸ்ரத்.
344/2 ஏ, தியேட்டர் வீதி,
சம்மாந்துறை - 01.
20.03.1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை.

ஈழக் குயிலின் இரங்கல் இசைகேட்டேன்
ஈழத்தின் மேகம் எனும்குரிசில் – தோழரை
விட்டுப் பிரிந்துள்ள வேதனையைத் தாங்காது
பட்ட அவலம் பகர்ந்து.

வாய்ந்த குருபக்தி வாடா நினைவுதினம்
தோய்த்த நெறிபலவும் சொல்லித்தன் – தாய்த்திரு
நாட்டின் தகைமை நவின்று சரமகவி
ஏட்டிற் பொறித்த திது.

வாழ்க குருபக்தி வாழ்க குருநாமம்
சூழ்கவிதை கூறும் இத்ரீஸின் – தாழ்விலாச்
சொல்வளம் மிக்கச் சுகமாய்க் கவிசொல்லும்
நல்லியல்பு கூர்க நகர்ந்து.

**புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன்,**
பெரியநீலாவணை.
29.07.1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை.

நாவலர் ஈழமேகம் நாவுக் கரசனாகி
பாராண்ட புலவர்கள் வரிசையிலே ஏறியவர்
பாவளந்தை வளமாக்கித் தாய்மண்ணின் பெருமையினைப்
பார்போற்ற வைத்தமகன் பக்கீர்த் தம்பியவர்.

தான்கற்ற கல்வியினால் தரணியிலே தன்னைப்போல்
ஏராள மாணவர்கள் ஏற்றம் பெறச்செய்தீர்
தூண்போல் அவற்றுள்ளே தோன்றிய நம்இத்ரீஸ்
ஆண்மகனே நீபிரிந்த அவலம் அவர்கவிகள்..

ஈழமெனும் சோலையிலே நீகூவும் ஓசையிலே
மண்பதை மகிழ்ந்தெழுந்தே உன்பெயரை நினைத்திருக்கும்
என்பதனால் ஈழத்துக் குயிலாகிக் கூவுமென்று
எழுபத்தி மூன்றில் எடுத்துரைத்தீர் தப்பில்லை.

சம்மாந் துறைக்கு மருதமுனை உறவென்றீர்
பழுதில்லா அம்மொழியை வசமாக்கி இதயத்தில்
நீ'யாக நம்கவிஞர் நம்முன்னே வைத்துள்ளார்
நற்சான்றே இதுவுங்கள் முன்னறியும் தன்மைக்கு.

கவிஞர் மருதூர் வாணர்,
மருதமுனை - 5.
05.01.1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பர்களுக்கு ....

அன்பின் நண்பர்களே!
கோடி வந்தனங்கள்.

நான்
மனித குலத்தை நேசிக்கிறேன்.
மனிதத் தன்மையற்றவர்களை வெறுக்கின்றேன்.
மனிதய நேயம்
என் இதயம் முழுவதும் குடிகொண்டிருப்பதால்
நல்ல மனிதர்களின் மறைவு
எந்தன்,
இதயத்தை நெருக்குகிறது
நெஞ்சைப் புண்ணாக்குகிறது
ஆதலால்,
மறைந்த பல நல்லவர்களையிட்டு
பற்பல அஞ்சலிக் கவிதைகளை வரைந்திருந்தபோதும்
என் கவியுலகப் பிரவேசத்தில்
முழுப்பங்குடைய நாவலர்
எம்மையெல் பக்கீர்த்தம்பி(ஈழமேகம்)
ஐயா அவர்களை
"இதயத்தில் நீ" எனத் தருகிறேன்
இதனை
அந்-நஸ்ரத்தினால்
வெளியிடப்படுவது மிகவும்
சந்தோசத்தை ஏற்படுத்துகின்றது.
"அந்-நுஸ்ரத்" - என் மூச்சு
அதன் கோட்பாடுகள் - என் ஆத்மா.

நவின்றேன் நன்றி.

ஏ.புத்தூரின் இக்பால்
23.02.1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பேனா ஓடியாது
# உனக்காக கவியாகும்.

அஞ்சலி செய்யும் மேடை
தலைமைப் பாவலரே
மங்கிய கவிதை மேகம்
நினைவுபடும் ஊரவரே
மஞ்சு மறைந்த தினம்
மனம்பதித்த அயலவரே
நன்றி மறவாஇக்
கவியித்தீர்ஸ் வந்தனங்கள்.

பொங்கும் தமிழ்மொழியில்
பொற்கவிகள் தானமைத்து
எங்கும் மணம்பரப்பி
நின்றகவி ஈழமேகம்
திங்கள் பனிரண்டின்
முன்னந்திப் பங்குனியில்
எங்கும் இருள்சூழ
இறைவனடி சேர்ந்தனரே.

அந்தநாள் ஊரவரின்
சிந்தையைக் கிளறியதால்
வந்தேன் வடித்தகவி
அஞ்சலிக்குச் சாற்றிடவே
முந்தினார் ஈழமேகம்
முத்தவர் எம்மூரின்
சிந்தை குழம்பியது
செய்நிலமும் வாடியதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமதூரின் இலக்கியத்தை
நீயெடுத்துச் செல்லவில்லை
வழியமைத்து நீசென்ற
வகையறியும் வையகமோ
உனதுமனச் சாந்திக்காய்
உள்ளவர்கள் தினமுழைப்பர்
அதற்காக இருகரமும்
ஏந்துகிறேன் இறைவனிடம்.

குயிலொன்று சோகக்
குரலெடுத்துப் பாடுவது
வழிகாட்டி நின்றதிசைக்
கருவியுடைந் ததினால்
குயிலாகி நீகூவும்
எனவுரைத்து நீமறைந்தாய்
குரலுக்கு நீயாசி
கொடுத்தருள வேண்டுகின்றேன்.

வான்கடலில் வெளிப்புமில்லை
வையகத்தில் மகிழ்வுமில்லை
தேன்மழை பொழியும்மேகம்
தேவனடி சேர்ந்ததனால்
தீன்வழி கவியோதி
முழங்கிப் பொழிவதற்கு
நாம்கண்ட நாவலர்போல்
நம்மூரில் யார்வருவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்றும் உன்னுடைய
　　மழைத்துளியும் கீதமுடன்
அள்ளி இணைக்காத
　　அணைத்தஅவர் படைப்புகளும்
பின்னே பிறந்துவரும்
　　பிள்ளைகுட்டி அத்தனைக்கும்
உன்னை இழந்தகுறை
　　இல்லாது போக்கிவிடும்.

கருவாகி உருவாகி
　　உருப்படியாய்த் திரளாகி
தரைகசிய கவிமழையைக்
　　கனிந்தே பொழிந்ததனால்
மறைகூறும் நிறைமொழிகள்
　　நிறைவாக நாம்பெறவே
உருவாக்கி உரைமலரை
　　உலகினுக்குத் தந்தவரே.

நறுமணமே வீசும்நற்
　　கவிகள்பல யாத்தெடுத்தும்
உரையாற்றும் திறமைமிகு
　　செல்வங்களைப் பயிற்றுவித்தும்
நிறைகொண்டு இலக்கியத்தில்
　　பொலிவுபெற எமதாரோ
வழிநின்று பறைசாற்றல்
　　எம்மவரின் கடனேதாம்.

＊＊＊

02.03.1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடை தெரியவில்லை - கண்ணீர் மாரி பொழிந்தனவே

பங்குனித் திங்கள் எண்பத்தைந்து
நேற்றுப் பகலாக நினைவில் தெரிகிறது.
தங்கிடவும் நிழலின்றி மரங்கள் இலைசொரியும்
பங்குனியின் கொடுமை, நல்மனங்கள் வாடியதே
கண்கள் குளமாகிக் கரையேறி ஓடியநீர்
எங்கள் நெஞ்சுகளுக்கு நெருப்பாக மாறியது.
பக்கீர்த் தம்பியென்ற புரட்சித் தாஸனவன்
மண்ணில்இனிப் பாதம் பதியாது என்பதனால்
கண்கள் காராகி கசிந்து வடிந்ததினால்
பங்குனியில் வெய்யோன் நீருறுஞ்சித் தோற்றுவிட்டான்.
ஆதலினால் எங்களுக்கு,
கோடை தெரியவில்லை – கண்ணீர்
மாரி பொழிந்தனவே.

நக்கினால் கருவிலலை விஷ மேறும் சுணங்காது
நக்கினால் வெய்யோன் நீர்ச்சுனைகள் கணம்வெடிக்கும்
தீநாக்கை நீட்டி காலவனோ மேகத்தை
நக்கியதால் எரிமலைகள் சிதறியன துறையூரில்
தமிழன்னை பெற்ற தவப்புதல்வன் புறப்பட்டான் என்செய்வோம்.

பங்குனியில் நீர்மறுக்கும் தாகத்தால் நாவறழும்
அத்தனைபெரிய கோடை பிறக்கும் பிரதேசம்
நீயிருந்து, மங்கையர்கள் குடமேந்தி அலைவதனைப்
படம்பிடிக்க கவிபடைக்கும் உனதுகரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பத்து ஐந்தின் பங்குனியில் காலையேனோ
பேனாவை முறித்து வீசிவிட்ட செய்தியினால்
கண்கள் இருளக் கார்முகிலாள் சிந்திய நீர்
எங்கும் பரவிப் பெருவெள்ளம் பொங்கியது.
எங்கள் இதயமெல்லாம் படபடப்பைக் கூட்டியது
பொல்லாத பேய்களெல்லாம் கூடநேற விட்டுவிட்டு
நல்வரைத்தேடும் காலவனே உன்செய்கை
கன்னியிளம் சிறிசுகளின் கண்கசிய வைக்குதுபார்.

நாவலரே பக்கீர்த் தம்பியே எங்களது
வாழ்வில் உந்தனது வாழ்வை மறவோம்
காலவனின் அழைப்பேற்று நீயேகும் வேளையிலே
கோடை தெரியவில்லை — கண்ணீர்
மாரி பொழிந்தனவே.

செந்தமிழில் விகடத்தை நீசொருவி
இதயங்கள் வென்றெடுத்த பெருமையினை
அந்தநினைவுகள் எங்களது மனக்கோபுரத்தை
இன்னும் தொடுகிறது என்றும் உசுப்பிடுமே
கட்டுரையாய் கவிதைகளாய் நீவடித்த காவியங்கள்
சொற்பொழிவும் எங்களது இனிய நினைவுகளே.

கல்லில் எழுதியதை கரைத்துவிட முடியாது
எங்களது நெஞ்சுகளில் உன்நினைவுகள் அப்படியே
நீரில் வரைந்த எழுத்தாக நீபோக
தந்திரமாய்ச் சொற்குவிக்கும் அரசியல் வாதியாமோ?
உன்னைக் கருவியாக்கி இலாபத்தைப் பெற்றவர்கள்
இன்னும் கதிரையில்தான் உனக்கும் [illegible] வருவாரோ
உந்தன் நினைவுயென்ன அவர்களது நெஞ்சுகளை
உசுப்பிவிட இயலாதே அவையிரும்புக் கோபுரங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிக்கும் கல்விக்கும் கடதாசி நோட்டுக்கும்
கூலிக்காரனுக்கு இடமில்லை என்றபோது
கலாபிவிருத்திக் கழகத்தின் எழுச்சிக்கு வழிகாட்டி
எமதூரின் இளைஞர்களின் அறிவுக்கு ஒளியூட்டி
நின்றவொரே ஆசிரியன் நீயாகி,
எழுச்சிபெற எமதூர் முன்னின்ற தலைமகனே.

சிறகு முளைக்காத குஞ்சுகளைத் தவிக்கவிட்டே
மடிந்த பறவை நீயல்ல,
இரைதேடி அலைந்தே உணவின்றி மாய்ந்துவிடும்
விடைதெரியாக் குஞ்சுகளும் நாங்களல்ல
பூவாகிப் பிஞ்சாகி காயாகிக் கனிந்த எங்கள்
விளைவுகளைக் கண்டபின்பே, திறமைக்கும் சான்றாகி,
மறுமைக்கும் இறையருளை மாநபியின் வழிநின்றே
பறைசாற்றி நீமறைந்தாய்.

பிஞ்சுபிடிக்கும் முன்பே அடியிறந்த மரமாகி
நீமறைந்தே போயிருந்தால்,
அழுகி விழுந்தே அவலநிலை கொண்டிருப்போம்
இந்நாளில் எமதூரில் அய்யாமுல் ஜாயிலியா
பகடைவிலை யாடியிருக்கும்.

***

29.02.1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலித்துச் சாற்றுகிறேன் ஏற்றிடுக கோமகனே

சொற்பொழிவால் கட்டுரையால்
　　ஞாயதமிழ் கவிவளத்தால்
தற்பெருமை கொள்ளாமல்
　　தமிழ்நாட்டில் படியேறி
நற்பெருமை எமதிலங்கைத்
　　தாம்நாடு பெற்றிடவே
ஒப்பரிய மேகமெனும்
　　பட்டத்தைக் கொணர்ந்தமகன்

இப்போது எமைவிட்டுப்
　　பிரிந்தவொரு வருடத்தின்
பின்வந்த நாளின்று
　　நினைவுபட்டு நிற்கிறதே
இப்போது அன்னவர்தம்
　　அன்பினால் இணைந்தநாம்
தப்பாது அவர்சேவை
　　நிறைவுகளை நினைத்திடுவோம்

வாழ்வுதனைச் சீராக்க
　　வாழ்வாங்கு வாழ்வதற்கே
ஓதியவுன் கவிதைகளும்
　　ஒப்பியநல் லறிவுகளும்
மாழாது வையகத்தின்
　　நெம்புகோல் என்பதன்மை
சோராத உன்பிறப்பால்
　　தாய் தமிழ் தாய்மகிழ்ந்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீராத பெருமைதனைச்
சம்மாந்துறை மகளும்
வாரியே கொள்வதற்கு
வகைசெய்த கோமகனே
பாராளும் பிரபுகளும்
பயன்பெற்ற உன்படைப்பால்
ஊரோடு உலகமுமே
உவந்தே மகிழுதையா

எப்போதும் உன்இனிமை
உன்னறிவுப் பொக்கிசமும்
என்போன்ற பலருக்கு
பயன்நிறைத்து நின்றதனை
தப்பாது தினந்தோறும்
தரணியிலே ஓதியிடுவேன்
உப்பரிகை வாழ்வோரும்
உன்போலா தரணிக்கு

அப்பப்பா எண்கட்ட
இயலாது எவராலும்
தப்பாத மரணத்தின்
பின்னவர்கள் நிலைப்பதில்லை
எப்போதும் உன்ஜனனம்
உச்சரிக்கும் மக்களுக்கு
தப்பாது வழிகாட்டும்
உன்னறிவுப் பேழைகள்தாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலியில் நீமுழங்கும்
வளம்மிகு தமிழ்சுவைக்க
தேனீகளாய் தரணியிலே
தேடிடுவர் வானொலியை
பேனாவை நீவிட்டே
ஏகிடினும் இறையடியை
மாணவனாய் உன்னிடத்தே
அறிவுபெற்றார் உள்ளனரே

ஊரெல்லாம் கதறியழ
உந்தனுயிர் பிரிந்தாலும்
பாராளும் வானத்தில்
பதிந்தமைந்த நிலவே நீ
யாராலும் அமைத்துவிட
இயலாது இறையவனை
துணைகொண்டு நீவடித்த
தூய தமிழ் கோபுரங்கள்

உன்னிடத்தே கவியெழுத
அறிமுகத்தை நீயமைத்து
பண்ணுக்கும் மெருகூட்டிப்
பாரினிலே கவிஞனென
என்னைநிறுத் தியவுன்
அறிவுப் பேழையினைக்
கொண்டே கவியமைத்தேன்
கோமகனே உந்தனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தைதான் குளிராதோ
இச் சிறியோன் அஞ்சலியை
வந்தனம் என்றே நீ
வரவேற்றுத் தானெடுப்பீர்
எந்தனுக்கு உன்னாசி
என்றென்றும் தந்திடுமுன்
அஞ்சலிக்குச் சாற்றும்கவி
ஏற்றிடுக கோமகனே.

* * *

-20.03.1986-

## நே ச க் கி ளி யே நீ வா டி !
***************************

காதற் கிளியே இதயக்காய்
கனியும் பழமும் ஆகாதோ
போதை மயக்கில் வீணாய் நீ
பூத்துக் குலுங்கும் வெவுக்காய்
ஆதிக்காலம் காத்தாலும்
ஆகும் பலனைக் காணாயே
பேதைக் கிளியே வீணாசைப்
பேரும் புகழும் ஆகாதே!

பஞ்சாய்ப் பறக்கும் இலவங்காய்
பழுத்தும் பயனை அடையாமல்
நெஞ்சங் கெட்ட கதையை நீ
நேற்றுக் கூட அறியாயோ
பசுக் கிளியே வீணாசைப்
பேயை விட்டே விரைந்தேயென்
நெஞ்சக் கனியைத் தருகின்றேன்
நேசக் கிளியே நீவாடி!

* * *

(மர்ஹூம் நாவலர் ஈழமேகத்தின் அறிமுகத்துடன், தினபதி கவிதா மண்டலத்தில் 1971.12.09ம் நாள் வெளிவந்தது. இதுவே எனது முதலாவது கவிதை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்-நுஸ்ரத்

அந்-நுஸ்ரத் - இது ஒரு வறிய குடும்ப அபிவிருத்தி சாந்தி சமாதான சமூக நலன்புரிச் சங்கம்.

சாதி சமய அரசியல் வேறுபாடுகளுக்கப்பால், மனிதர்கள் அனைவரும் ஓரினம்.

ஆணும் பெண்ணுமாய்ச் சாதிகள் இரண்டு.

மொழிகள் அனைத்தும் மனித குலத்தின் தொடர்புச் சாதனம்.

மனித நேயமும் வறுமையின்மையும் பிறப்பின் பயனை நிறைவு செய்யும்.

இயன்றதை இயன்றளவு உதவுவதே மனிதத் தன்மை.

உண்மையும் உழைப்பும் உயர்வினை நல்கும்.

என்னும் கோட்பாடுகளைக் கொண்டு உருவாக்கப்பட்டதே இச் சங்கமாகும்.

இச்சங்கத்தின் கோட்பாடுகளுக்கும், செயற்பாடுகளுக்கும் மதிப்பளித்து ஒற்றுமைப்பு வழங்குமாறு, அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றது அந்-நுஸ்ரத்.

"ந ன் றி"

தொடர்புகள்:

செயலாளர்;
அந்-நுஸ்ரத் தலைமையகம்,
171, பொது நூலக வீதி,
மருதமுனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான மயானட
கடன் வந்து சேவட
உறங்கியவன் கொண்டாட
நான் இங்கு [illegible] நின்றாட
தவறு செய்து
உடன் [illegible] கேட்ட உ.சிங

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org